# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

மின்னை மிளிர் நேமியுடை விண்டுவுரை மெய்யப்
பின்னை மண வாளனை யடைந்து பிறி தற்றுத்
தன்னையற விட்டதலை வர்க்கது தருங்கொ
லென்னையவ ரோடுமிறை யெண்ணிடவு மென்றே.

செப்பியடி யேன்முடிவி றீவினைசெய் நீச
னொப்பரிய சோதிவளை ருத்தம தலத்தி
லெப்படி மிதிப்பதிரு கால்கொடெனை யாளு
மப்பனொடு கட்டுரையி னன்பரென வாழ்வார்.

கூறவிறை யேவலொடு சென்றவர்கள் நேரே
மாறிடி லுமைக்கொடுசெல் வோம்வலியி லென்றே
யேறியெதிர் செல்லவவ ரோடியவ னொட்டா
தாறுவரு காவிரியி னக்கரையி லானோர்.

இத்திற மரங்கரொ டியம்பிடுவ மென்றே
மெய்த்திற முணர்ந்தநெறி நால்வர்களு மீண்டாங்
கத்திறமு மாயனொ டறைந்தனர்க ளம்மா
னெத்திற மியற்றிலிவ னெய்துமென வெண்ணி.

வேறு.

லகி லாத மாமாயை யரங்கன் றனையர்ச் சனைசெய்யு
லக சார்ங்க மாமுனியை யுவந்து கூவி யுத்தமபோய்ப்
ருங் காண நின்றுளிற் பாணாழ் வானைப் பரிந்தேற்றி
வும் பதியை வலஞ்செய்து கொணர்க வென்று னிகரில்லான்.

வேறு.

மாசிலா முனவன் மாயன் மலரடி வணங்கி யேக
வாசிலா வனைத்துக் கொத்து மவனுடன் சென்மி னென்றே
யீசனு மருளிச் செய்ய யாவரு மெழுந்து சென்றத்
தேசினு னின்று பாடுந் திருமுகத் துறையை மன்னி.

சுற்றுற வளைந்து கொண்டு தொழுதனர் திருப்பா ணாழ்வா
ருற்றவர் தாள்க டம்மி லுடன்பணிந் துருக வீசற்
கற்றமா முனிவ னாழ்வீ ரருளிப்பா டெமக்கின் றென்று
னற்றவ முடைய பத்தர் நானது செய்யே னென்றார்.

ஏடவிழ் துளபத் தாரா னெடுத்துமைக் கொணரச் சொன்னு
னோடவு மொட்டோ மாழ்வீ ரென்றனு ருவந்து சென்றார்
மாடுநின் றவரை நோக்கார் மற்றொரு திசையை நோக்கிக்
கூடுமோ நீசன் மாசில் குலத்தொடு மென்று கூறி.

MAHAMAHOPADHYA
DR. U. V. S. IYER LIB
SAR. MADR

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்

## வேறு.

தந்தைதாய் சுற்ற முற்ற தமியனே னுயிரு மாகி
முந்தைநாள் விரும்பிச் செய்து மொய்த்தவல் வினையுந் தீர்த்தென்
சிந்தையே கோயில் கொண்டு திருவரங் கத்துண் மன்னு
மெந்தையார் திருமார் பன்றோ வென்னையாட் கொண்ட தென்றும்

வண்டுழு ரிதழித் தாரோன் வல்வினை முழுதுந் தீர்த்துக்
கொண்டல்வந் தமருஞ் சோலைக் குளிர்புன லரங்க மன்னி
யண்டரண் டங்க ளாதி யனைத்துள பொருளுந் தண்டா
துண்டமர் மிடறு கண்டூ ருயக்கொண்ட தென்னை யென்றும்.

கையம ராழி சங்கங் கதிர்மதி யிருபான் மன்னு
மையமர் கிரியி தென்ன வளர்வதாங் கருணைக் குன்றம்
பையர வணையுண் மன்னு மரங்கனார் பதுமம் போன்ற
செய்யவா யையோ வின்றென் சிந்தனை கவர்ந்த தென்றும்.

பரியவா ளவுண னாகம் படிமிசை மடிமே விட்டே
யரியவா னுகிராற் கீண்ட வரியென வரங்கத் தம்மா
னுரியமா முகத்தி னீண்டு செவ்வரி யோடி வாடாப்
பெரியவான் கண்க ளென்னைப் பேதைமை செய்த வென்றும்.

பாலனாய் ஞால முண்டு பங்கயச் செல்வி தன்னோ
டாலமா மரத்தி லோர்சிற் றிலையம ரரங்கத் தம்மான்
கோலமா மணிக ளாரங் குறுநகை முடிவில் சோதி
நீலமா மேனி நெஞ்சை நிறைகொண்ட தையோ வென்றும்

கொண்டல்போ லுருவத் தானைக் கோவல னாகி நெய்பா
லுண்டசெவ் வாயி னானை யுளம்புகுந் தருக்கு வானை
யண்டர்கள் பெருமான் றன்னை யமுதினை யரங்கத் தானைக்
கண்டவென் கண்க ளாற்பின் காண்கிலே னொன்றை யென்றும்.

## வேறு.

அப்படியே திருமொழியோர் பத்துரைத்தாங் கணியரங்கன் திருமு
லொப்பரிய முனிவரனோ டெய்தியவன் திருத்தோணின் றம்பர் வா
செப்பரிய பாண்பெருமா னம்பெருமாள் சரணமெனச் சென்று தா
ரிப்படியே யிறையருளின் செயலிருக்கு மென்றொருவர்க் கியம்ப லா

சரணமெனத் திருவடிக்கீழ்ச் சென்றிறைஞ்சும் பாண்பெருமா டன்னை
சரணவொழுங் குறும்வஞ்சப் பொய்யன்புக் கெட்டாத கமலச் செவ்
ரணனெழுங் இணையடியை மெய்யன்பர் சென்னிமிசைப் பொருந்த
பூரணிதுவே புகலிடமென் றக்கமலத் திருவடியி லடங்கி னாரே.

